**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2017 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்ட நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2006 - 2017 පෙබරවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.09**

*2006 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 392 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## மேல் மாகாண மாகாண சபையின் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பங்களைக் கோரல்

மேல் மாகாண மாகாண சபையில் வெற்றிடமாகக் காணப்படும் கீழ்வரும் பதவிக்கு, உரிய தகைமைகளை உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

1. இணைத்துக் கொள்ளப்படும் பதவிக்கான சேவைகளும் தகைமைகளும் :

| பதவி | பதவிக்குரிய சேவை | தகைமைகள் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| மாகாண ஆயுர்வேத ஆணையாளர் | இ. ஆ. வை. சே. உயர் வகுப்பு | இ. ஆ. வை. சே. உயர் வகுப்பின் உத்தியோகத்தராதல் வேண்டும் (உயர்வகுப்பில் உத்தியோகத்தர்கள் இல்லாதவிடத்து I வகுப்பு உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்) | 01 |

2. **வேறு**:

***விணைப்பதாரிகள் :***

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* சிறந்த நடத்தையை உடையவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவியில் இணைத்துக் கொள்வதற்கான தகைமைகள் அனைத்துவகையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவேண்டும்.
* உரியசேவையில்/வகுப்பில்/தரத்தில்/நியமனத்தை நிரந்தரம் பெற்றிருத்தல் வேண்டும்
* கடந்த 5 வருடங்களுக்குள் எந்தவொரு ஒழுக்காரீதியான தண்டனைக்கும் உட்படாதவராக இருக்கவேண்டியதுடன் அவ் 05 ஆண்டுகளுக்குள் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.
* தமது பதவியில் பணியாற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் உளரீதியான தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.

3. **இணைத்துக் கொள்ளும் முறை**.- இந்த அறிவிப்பில் காட்டப்பட்டுள்ள மேற்படி பதவிக்கான விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியின் தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக மேல்மாகாண ஆளுநரால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடத்தப்படும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட கொண்ட விண்ணப்பதாரியால் வெற்றிடம் நிரப்பப்படும், புள்ளிகள் வழங்கப்படும் ஒழுங்குமுறை இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

இணைத்துக் கொள்ளல் தொடர்பான இறுதி முடிவு மேல்மாகாண கௌரவ ஆளுநரைச் சாரும்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**:

* இந்த நியமனம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு விதிமுறைகள், தாபனக் கோவை, நிதிஒழுங்குவிதிகள், உரியசேவைகள் உறுப்புரைமற்றும் உரியசேவைக்கு நியமிக்கப்பட்டு வெளியிடப்படும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவதோடு, கௌரவ ஆளுநரால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் மாகாணசபை ஒழுங்குவிதிகள்/பட்டயம்/நிதிவிதிகள் எற்பாடுகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேல்மாகாணசபையில் 3 வருடகாலம் பணிபுரிய இணங்கவேண்டும்.

5. **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**.- அனைத்து விண்ணப்பங்களும் முறையாகவும் சரியாகவும் பூர்த்திசெய்யப்பட்டு 2017.02.23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு, தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிக்கலாம் என்ற தமது திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடனும் "ஆளுநரின் செயலாளர் (மே.மா) ஆளுநரின் செயலாளர் பணிமனை, 5 ஆம் மாடி, இலக்கம் 109, ரொட்டுண்டாகட்டிடம், காலி வீதி, கொழும்பு 03" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டியதுடன், விண்ணப்பங்கள்

அனுப்பும்'' உறையின் இடதுபக்க மேல்மூலையில் உரிய பதவியை தெளிவாகக் குறிப்பிடவேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள், மற்றும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாதவர்களின் விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தாமதித்தோ தொலைந்துபோதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் இப்பணிமனையால் எற்றுக் கொள்ளப்படாது. சமர்ப்பிக்க வேண்டிய மாதிரிவிண்ணப்பப் பத்திரமொன்று இணைப்பு 2ல் காட்டப்பட்டுள்ளதுடன் அது www.secgov.wpc.gov.lk இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**குறிப்பு**.- நேர்முகப் பரீட்சையில் அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆள் அடையாளத்தை சான்றுப்படுத்துவதற்காக, ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை அல்லது வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. **போலியான தகவல்களை வழங்குதல்**.- விண்ணப்பதாரிகளால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் போலியானதோ அல்லது தவறானதோ என இணைத்துக் கொள்வதற்கு முன்னர் தெரியவந்தால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

அவ்வாறான போலியான அல்லது தவறான தவறான தகவல் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர்,தெரியவந்தால் அதற்குரிய நடவடிக்கைகளின் கீழ் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பீ. சோமசிறி,
ஆளுநரின் செயலாளர்,
மேல் மாகாணம்.

2017, சனவரி 25.

இணைப்பு 01

மேல்மாகாண சபையின் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான உத்தியோகத்தர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய புள்ளிகளை வழங்கும் ஒழுங்குமுறை.

01. **சிரேஷ்டத்துவம்** - ஆகக்கூடிய புள்ளிகள் 35

1. இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் உயர் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட நாள் முதல் ஒருவருடத்திற்கு 07 புள்ளிகள் வீதம்.

02. **கல்வித் தகைமைகள்** - ஆகக்கூடிய புள்ளிகள் 15

1. கலாநிதி (15 புள்ளிகள்)
2. முதுகலைமானிப் பட்டம் (12 புள்ளிகள்)
3. முதுமானிப் பட்டம்/முதுகலைமானிப் பட்டம் அல்லது அதற்குச் சமமான வேறுபட்டப் பின்படிப்புக்காக (10 புள்ளினிகள்)
4. மேலதிக பட்டப் பின்படிப்பு (05 புள்ளி)
   (உயர் வகுப்புக்கு நியமிப்பதற்குரியதான பட்டப் பின்படிப்பு தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

03. **தமது துறைக்குரிய நடவடிக்கை தொடர்பான அனுபவம்** - ஆகக்கூடிய புள்ளிகள் 20

1. வைத்தியசாலைகள்/நிருவாகம் தொடர்பான 4 வருட அனுபவம், ஒருவருடத்துக்கு 03 புள்ளிகள் வீதம் (12 புள்ளிகள்)
2. நிருவாகத்துடன் தொடர்புடைய 02 வார காலததுக்கு அதிகமான பயிற்சிப் பாடநெறி ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் (08 புள்ளிகள்)

04. **வினைத்திறன் மதிப்பீடு** (முந்தைய 05 வருடங்களுக்கு)
(ஒருவருடத்துக்கு ஆகக்கூடியது 02 புள்ளிகள்) (ஆகக்கூடிய புள்ளிகள் 10)

1. அதிசிறந்த (02 புள்ளிகள்)
2. பொதுவான அளவுக்குமேல் (01 புள்ளி)
3. திருப்திகரமானது (1/2 புள்ளி)

05. **மேலதிக தகைமைகள்** - ஆகக்கூடிய புள்ளிகள் 15
1. துறைக்கு எற்புடைய பிரசுரிக்கப்பட்டுள்ள ஆய்வேடுகள், கடிதகட்டுரை அறிக்கைகள்/வேலைத் திட்டங்கள் (06 புள்ளிகள்)
2. ஏனைய அரசகரும மொழித் திறன்கள் (சிங்களம்/தமிழ்) (04 புள்ளிகள்)
3. மேல்மாகாணசபையின் மாகாண அரசாங்க சேவையின் ஆயுர்வேத வைத்தியராக 03 வருடங்களுக்கு மேலான சேவைக்காக ஒரு வருடத்திற்கு ஒரு புள்ளி என்ற வீதம் (ஆகக் கூடிய புள்ளிகள் 05)

06. **நேர்முகப் பரீட்சை** - ஆகக்கூடிய புள்ளிகள் 05

மொத்தப் புள்ளிகள் - புள்ளிகள் 100

மாதிரிவிண்ணப்பப் படிவம்

**மேல்மாகாண மாகாண சபையின் ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

1. முதலெழுத்தகளுடன் பெயர் (தமிழில்) திரு./திருமதி/செல்வி :----.
(ஆங்கிலத்தில்) Mr/Mrs/Miss :----.
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்/பெயர்கள் (தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.
3. 3.1 அலுவலக முகவரி :----.
3.2 அலுவலகத் தொலைபேசி இலக்கம் :----.
3.3 நிரந்தரமுகவரி :----.
3.4 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (வீடு) :----.
கையடக்கத் தொலைபேசி :----.
4. 4.1 பிறந்ததிகதி :
வருடம் :----. மாதம் :----. திகதி :----.
4.2 வயது (விண்ணப்பங்கள் எற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில்)
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
6. 6.1 இ. ஆ. வை. சேவையில் நியமிக்கப்பட்ட திகதி :----.
6.2 சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி :----.
7. 7.1 இ. ஆ. வை. சே. உயர் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி :----.
7.2 அப் பதவியுயர்வு கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.
8. 8.1 இப்போது வகிக்கும் பதவி மற்றும் அப்பதவிக்கு நீங்கள் நியமிக்கப்பட்ட கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.
9. (i) கல்வித் தகைமைகள் (பட்டப் பின்படிப்பு டிப்ளோமா/பட்டப்பின்படிப்பு/கலைமானி/முதுதத்துவமானி/கலாநிதி :----.

| கல்வித் தகைமைகள் | தோற்றும் ஊடகம் | நிறுவனம் | சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

(ii) தொழில்/ஏனைய தகைமைகள்

| தொழிற்தகைமைகள் | தோற்றும் ஊடகம் | நிறுவனம் | சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

*10. வழங்கப்பட்டுள்ள பயிற்சிகள் (உள்நாட்டு/வெளிநாட்டு)*

| பயிற்சிநெறி | தோற்றும் ஊடகம் | நிறுவனம் | சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

*11. ஏனைய மொழிகள் தொடர்பில் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் :----.*

என்னால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், கடந்த (5) வருங்களில் உரிய சம்பள அதிகரிப்புகள் என்னால் ஈட்டப்படுள்ளன எனவும் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் தெரிவிக்கிறேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் உறுதியுரை**

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படித் தகவல்கள் சரியானவை எனவும், அறிவிப்பின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதையும் இப்போது இந்த விண்ணப்பதாரிக்கு எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் காணப்படவில்லை எனவும், நீதிமன்றமொன்றில் தண்டனை பெற்றிருக்கவில்லை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

-------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

**அமைச்சுச் செயலாளர்/திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படித் தகவல்கள் சரியானவை எனவும், அறிவிப்பின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதையும் இப்போது இந்த விண்ணப்பதாரிக்கு எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் காணப்படவில்லை எனவும், நீதிமன்றமொன்றில் தண்டனை பெற்றிருக்கவில்லை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவ் உத்தியோகத்தர் கோரியுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் பதிலாளொருவர் இன்றி/ பதிலாளொருவருடன் விடுவிக்கப்படுவதற்கு இணங்குகிறேன்/இணங்கவில்லை.

-------,
அமைச்சுச் செயலாளர்/திணைக்களத்
தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

*2-455*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.